# 11 இறை ஆட்சி



11.1 படம் அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே
இறைவன் இருக்கின்றார்

அரசு என்பது ஒரு நாட்டின் வரையறைக்குள், ஒரு கொள்கை அல்லது சட்ட விதிகளுக்குள் ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் இடையில் கூட்டாக இடம்பெறும் ஆட்சி முறையாகும். இறை ஆட்சி உலகு சார்ந்த அரசல்ல, இறை ஆட்சிக்கு நாட்டு வரையறை இல்லை. அப்படியாயின் இறைவனின் அரசு மேலே வானத்திலா?

கீழே பூமியிலா?
உமக்குள்ளேயா?
எனக்குள்ளேயா?
அன்றேல் இன்னும் வரவில்லையா?

இறை ஆட்சி என்பது,

இறை விருப்பத்திற்கு பணிவது ஆகும்.

விண்ணகத்தில் இருப்பது என்பது ''கிறிஸ்துவோடு இருப்பது ஆகும்'' . தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவிலே வாழ்கின்றார்கள். ஆனால் தங்கள் சுய அடையாளம், பெயர் என்பவற்றைப் பேணுகின்றார்கள். தூய அம்புறோஸ் கூறுவதன்படி வாழ்வதென்பது கிறிஸ்துவோடு இருப்பது ஆகும். கிறிஸ்து எங்கு இருக்கிறாரோ அங்கு வாழ்வும் இறை ஆட்சியம் இருக்கின்றன.

(க.தி.ம.1025)

இயேசு இறை ஆட்சி மதிப்பீடுகளை உவமைகளின் மூலம் கற்பித்தார்.

உதாரணம் :

1.விதைப்பவன் உவமை. (மத்தேயு 13:1-23)
2.வயலில் தோன்றிய களைகள் உவமை. (மத்தேயு 13:24-30)
3.கடுகுவிதை, புளிப்பு மாவு உவமை. (மத்தேயு 13:31-43)
4.புதையல், முத்து, வலை உவமை. (மத்தேயு 13:44-53)

## விதைப்பவன் உவமை



11.2 படம் விதைப்பவன் உவமை

| விதைகள் விழுந்த நிலம் | விதைகளுக்கு நடந்தவை | உவமையின் விளக்கம் |
|---|---|---|
| வழியோரம் விழுந்த விதைகள் | பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன | உள்ளத்தில் விதைக்கப்பட்ட விதைகளைத் தீயோன் கைப்பற்றிச் செல்வான் |
| மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்த விதைகள் | அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. எனினும் கதிரவன் மேலே எழ அது காய்ந்து வேரில்லாமல் போனது | இறை வார்த்தையைக் கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் வேரற்றவர்கள் எனவே அவர்கள் சிறிதுகாலமே நிலைத்திருப்பார்கள். இறைவார்த்தையின் பொருட்டு வேதனையோ,இன்னலோ நேர்ந்த உடனே தடுமாற்றம் அடைவார்கள் |
| முட்செடிகளின் இடையே விழுந்த விதைகள் | முட்செட்டிகள் வளர்ந்து அவற்றை நெருக்கி விட்டன | இறைவார்த்தையைக்கேட்டும் உலக கவலையும், செல்வப் பற்றும் அவ்வார்த்தையை நெருக்குவதால் பயன் அளிக்க மாட்டார்கள். |
| நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் | சில நூறு மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன | இறை வார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொள்வார்கள். இவர்களுள் சிலர் நூறுமடங்காகவும் சிலர் அறுபது மடங்காகவும், சிலர் முப்பது மடங்காகவும் பயன் அளிப்பர் |

இயேசுதம் போதனை மூலம் இறை ஆட்சி பற்றி மக்களுக்கு விளக்கிகினார்.

இறையாட்சி எப்போது வரும் என்று பரிசேயர் இயேசுவிடம் கேட்டனர். அவர் மறுமொழியாக, “ இறையாட்சி கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது. இதோ, இங்கே! அல்லது அதோ, அங்கே எனச் சொல்ல முடியாது. ஏனெனில் இறையாட்சி உங்கள் நடுவேயே செயற்படுகிறது” என்றார்.

(லூக்கா 17:20-21)

ஆகையால் அவருடைய அரசைத்தேடி அலைந்து திரிய அவசியமில்லை. அவருடைய அரசு எங்களுக்குள்ளேயே உள்ளது, எங்கள் நடுவே உள்ளது. நாம் வாழும் எல்லா இடத்தையும் இறை ஆட்சிக்கும் கொண்டுவர எம்மை அர்ப்பணிப்போம். அதை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் இயேசு போதித்த மலைப் பொழிவை தினமும் வாசித்து, அப்போதனைகளின் படி வாழுவோம்.

மலைப் பொழிவு கற்பிக்கும் இறை ஆட்சி மதிப்பீடுகள்.



மத்தேயு 5,6,7ம் அதிகாரங்களில் அடங்கியுள்ள மலைப்பாழிவில் இடம் பெற்ற படிப்பினைகள் சில பின்வருமாறு;

| | |
|---|---|
| எட்டுப் பேறுகள் | (மத்தேயு 5: 1-12) |
| உப்பும் ஒளியும் | (மத்தேயு 5: 13-16) |
| பழிவாங்குதல் | (மத்தேயு 5: 38-42) |
| பகைவரிடம் அன்பாயிருத்தல் | (மத்தேயு 5: 43-48) |
| அறச் செயல்கள் | (மத்தேயு 6: 1-4) |
| நோன்பு இருத்தல் | (மத்தேயு 6: 16-18) |
| உண்மைச் செல்வம் | (மத்தேயு 6: 19-21) |

கவலை வேண்டாம் (மத்தேயு 6: 25-34)
பொன் விதி (மத்தேயு 7: 12)
இடுக்கமான வாயில் (மத்தேயு 7: 13-14)
சொல்லும் செயலும் (மத்தேயு 7: 21-23)
இருவகை அடித்தளங்கள் (மத்தேயு 7: 24-29)

**எட்டுப் பேறுகள் மூலம் இறை அரசின் மதிப்பீடுகள்**

- ஏழையரின் உள்ளத் தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது. (மத் 5:3)
- துயருறுவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். (மத் 5:4)
- கனிவுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர். (மத் 5:5)
- நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நிறைவு வெறுவர். (மத் 5:6)
- இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். (மத் 5:7)
- தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். (மத் 5:8)
- அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். (மத் 5:9)
- நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. (மத் 5:10)

இயேசு எட்டுப் பேறுகள் மூலம் இறை ஆட்சியின் மதிப்பீடுகளை எடுத்துக் காட்டுகிறார். எமக்குள்ளும் எம்மத்தியிலும் இறை ஆட்சியைக் கட்டியெழுப்ப இந்த எட்டுப்பேறுகளையும் பின்பற்றி அமைதியும், மகிழ்ச்சியும், அன்பும் நிறைந்த ஓர்

உலகை உருவாக்குவோம்.

## இலங்கையின் ஒழுக்க விழுமியங்களில் பிரதிபலிக்கும் இறை ஆட்சி மதிப்பீடுகள்

இறை ஆட்சியின் மதிப்பீடுகளை வளர்க்க இயேசு எம்மை அழைக்கிறார். இலங்கையில் பின்பற்றப்படும் ஒழுக்க விழுமியங்கள் மூலம் இறை ஆட்சியின் மதிப்பீடுகளை வளர்க்க முற்படுவோம். அவ் ஒழுக்க விழுமியங்களுள் சில பின்வறுமாறு,

- ✦ கரங்களை குவித்து ''கடவுளுக்குத் தோத்திரம்'' எனக் கூறுதல்.
- ✦ வீட்டிலிருந்து வெளிப்பயணங்கள் செல்லும் முன்னே, மற்றும் ஒரு முக்கிய செயலை, அல்லது வேலையை ஆரம்பிக்கும் முன்னர் செபித்தல், சிலுவை அடையாளம் வரைதல்.
- ✦ பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களுக்குப் பாதம் பணிந்து வணங்குதல்.
- ✦ மற்றவர்களுடைய தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளித்து, ஒதுங்கியிருத்தல்.
- ✦ பெரியோரை மதித்தல், உரிய கௌரவமளித்தல்.
- ✦ மூத்தோர், பெரியோர் முன்னிலையில் எழுந்து நிற்றல், அவர்களை விட மேல் ஆசனங்களில் அமராதிருத்தல்.

இவற்றுடன் இன்னும் பல ஒழுக்க விழுமியப் பண்புகள் உள்ளன. அவற்றைப் பாதுகாத்துப் பின்பற்றி வாழ்வதன் மூலம், நாம் இறை ஆட்சியை நோக்கி மக்களை வழிநடத்துபவர்களாக இருப்போம்.

இறை ஆட்சியை உரிமையாக்கிக்கொள்ள இறைவன் நம் எல்லோரையும் அழைக்கிறார், என்பதைப் புரிந்து நாம் அனைவரும் இயன்ற அளவில் அதற்காக அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும்.

செயற்பாடு

1.பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| உவமை | உவமை சுருக்கம் | படிப்பினை |
|---|---|---|
| 1. வயலில் தோன்றிய களைகள் | | |
| 2. கடுகுவிதை | | |
| 3. புளிப்புமா | | |
| 4. புதையல் | | |
| 5. முத்து | | |
| 6. வலை | | |

2. மலைப்பொழிவின் உதவியுடன் பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| போதனை | உமக்குக் கிட்டும் செய்தி |
|---|---|
| 1. பழிவாங்குதல் தொடர்பான போதனை | ........................................................ |
| 2. அறச் செயல்கள் தொடர்பான போதனை | ........................................................ |
| 3. நோன்பிருத்தல் தொடர்பான போதனை | ........................................................ |

**வாழ்க்கைக்கு**

எட்டுப்பேறுகளையும் அனுசரிப்போம்.